Vol : 8

இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

Issue : 10

Price Rs. 3

# HUNDRED VILLAGE MINISTRY

August 2008

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

Annual Subscription India Rs.25 Foreign Rs.250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




## 2008 ஆகஸ்டு

**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்.**

யோசுவா 3:5

**தேவனுக்கே மகிமை சபை**
**தா. பளூர்** ஜெபவீடானது
**சிமிர்னா அசெம்பிளி**
**போதகர் ஜான் சாம் ஸ்டீபன்**
ஞாபகர்த்தமாக
*Yishun Evangelical Church*
மூலம் கட்டப்பட்டு
**பாஸ்டர் ஜோசப் ஜெபமணி**
மூலம் 17.06.08 அன்று
தேவனுடைய மகிமைக்கென்று
பிரதிஷ்டை செய்யப்பட்டது.



***Please Pray for Rev. Sam Gift,Symrna***

**இயேசு கிறிஸ்துவே கர்த்தர்**

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**CHIEF EXECUTIVE OFFICER**
காரியதரிசி கடித நாள்: 10.07.08.



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,
தேவசமாதானம் உண்டாவதாக!

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 2008ம் ஆண்டில் TVGM மூலம் **3 வாரத்திற்கு ஒரு ஜெபவீடு** ஆலயமில்லாத கிராமங்களில் கட்டப்பட்டு தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டு வருகிறது.

"100 கிராம ஊழியம்" ஒழுங்காக நடைபெறுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலும் AJC சுவிசேஷ குழுவினர் TVGM தரிசனத்தோடும், ஒழுங்கு முறைகளோடும் இதுவரை செயல்பட்டு வருகிறார்கள்.

கோவை மாவட்டத்தில் **பாஸ்டர். ஜோசப் ஜெரால்டு** அவர்களும், TVGM ஸ்தாபகரை அழைத்து தங்கள் சபையில் கிராம தரிசன செய்தி கொடுக்க வைத்து, தங்கள் சபை மக்களை பயிற்சிவித்து **போத்தனூர்** பகுதியை சுற்றிலும் சுவிசேஷம் அறிவித்து வருகிறார்கள்.

**லூாக்கா 9:6:–** அவர்கள் புறப்பட்டுப் போய், கிராமங்கள்தோறும் திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிணியாளிகளைக் குணமாக்கினார்கள். என்ற வசனம் நிறைவேறுவதற்காக தேவனைத்துதியுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**
கிறிஸ்துவின் பணியில்,
*Stephen Christopher*

# உள் பக்கம் ...


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| Wrapper – வாக்குத்தத்தம் | Photos |
| Wrapper - Inner | Photos |
| காரியதரிசி கடிதம் | 1 |
| வாக்குத்தத்த செய்தி | 2 - 4 |
| Hindi, Malayalam, English | 5 - 8 |
| திருவண்ணாமலை – புதுப்பாளையம் 100 கிராம ஊழியம் நோட்டீஸ் | 9 |
| குடிமங்கலம் யூனியன் 100 கிராம ஊழிய அறிக்கை சிறுவர் இல்லப்பிள்ளைகளின் படிப்பு செலவு | 10 -13 |
| விசுவாசிகளின் சாட்சிகள் | 14 |
| புறமத நண்பர்கள் சாட்சி காங்கேயம் இயேசுவை விரும்புவோர் முகாம் | 15 |
| இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை, துதி ஆராதனை | 16 |
| AJC நடமாடும் சுவிசேஷக் குழு 100 கிராம ஊழிய அறிக்கை சிறுவர் இல்லம் கட்டிட நிதி | 17 - 19 |
| தினசரி ஜெபக்குறிப்புகள் | 20 |
| போட்டோ (கட்டிக்கொண்டிருக்கும் ஜெபவீடு, சிறுவர் இல்லம் ) | W 3 |
| தொடர்பு முகவரி | W4 |

# நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்.

யோசுவா 3:5

கர்த்தருடைய சமுகத்திலே அற்புதங்களைஎதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அன்பு சகோதரியே, சகோதரனே, தேவஊழியரே!

கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது: **யோசுவா 3:5**

**உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள். நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்.**

சுருங்கக் கூறின்,

**இன்று பரிசுத்தம்.**
**நாளை அற்புதம்.**

எவ்வளவு மேன்மையான வாக்குத்தத்தம். ஏனெனில் அற்புதம் இப்பூலோக வாழ்க்கையோடு முடிந்து போம். ஆனால் பரிசுத்தமோ பரலோகத்தில் நாம் நித்தியமாக வாழ வழி செய்யும்.

ஆதலால் தான் வேதம் சொல்கிறது:

**கொலோசெயர் 3:2**

**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.**

அற்புதங்களைக் காட்டிலும் பரிசுத்தத்தை தேவன் மேன்மையாக எண்ணுகிறார்.

நமக்கு விருப்பம் **அற்புதம்.**
ஆனால் தேவனுக்கு விருப்பம் **பரிசுத்தம்.**

தேவ விருப்பத்தை நிறைவேற்றும்போது, இம்மையிலும் ஆசீர்வாதம். மறுமையிலும் ஆசீர்வாதம்.

என் அன்புக்குரியவர்களே! 'இரட்டிப்பான நன்மையைத் தருவேன்' என வாக்களித்தவர் இந்த மாதத்தில் பரிசுத்தத்தையும், அற்புதத்தையும் தருவதற்கு உண்மையுள்ளவராக இருக்கிறார்.

**இயேசு சொன்னார்: 1பேதுரு 1:16**

**நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.**

**எபி. 12:14** **பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே.**

**1தெசலோனிக்கேயர் 4:3**

**நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.**

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே, நீங்கள் அனுதினமும் அற்புதங்களை காண வேண்டுமென்பதே தேவசித்த மாயிருக்கிறது.

இதற்கு ஆதாரமாகத் தான் தேவன் முதலாவது பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள் என கட்டளை கொடுக்கிறார்.

ஏனெனில், **ஏசாயா 29:14**

**இதோ, நான் அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன்.**

என தேவன் வாக்கு அருளியிருக்கிறார்.

நிச்சயமாகவே, நீங்கள் ஒரு அற்புதத்தை / அதிசயத்தை இந்த வாரத்தில் அல்லது மாதத்தில் அல்லது வருடத்தில் காணப் போகிறீர்கள். இதற்கு அடிப்படை பரிசுத்தமாகும்.

**யோபு கூறுகிறார்:– யோபு 5:9**

**ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்.**

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!

**இயேசு உங்களை நேசிக்கிறார்.** உங்கள் குடும்பத்தை நேசிக்கிறார். உங்கள் தொழிலை நேசிக்கிறார். ஆதலால் தான் உங்களுக்கு வாக்களித்துள்ளார்.

அற்புதம், அதிசயம் பெற பிரதான வழி "**இன்று பரிசுத்தம்**". உங்கள் வீடுகளில் பின்வருமாறு எழுதிப் போடுங்கள்.

**இன்று பரிசுத்தம்**
**நாளை அற்புதம்.**

நம்முடைய கண்களின் முன்னால், இருதயத்தின் ஆழத்தில் '**பரிசுத்தம்**' என்ற வார்த்தை தொனிக்கட்டும்.

ஏனெனில் ஒவ்வொருநாளும் தேவன் உங்கள் வாழ்க்கையில் அற்புதம் செய்ய வாஞ்சிக்கிறார்.

ஏதோ ஒரு காரியத்தில் ஒரு அற்புதத்தை இன்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். ஆனால் தேவனோ அனுதினமும் உங்கள் வாழ்க்கையில் அற்புதத்தையும், அதிசயத்தையும் செய்ய வாஞ்சிக்கிறார்.

**பெற்றுக் கொள்ள ஆயத்தமா?**
அப்படியானால்,

**இன்று உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்.**

மேலும் வேதம் கூறுகிறது:

**யாத்திராகமம் 20:8** ஒய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.

**லேவியராகமம் 22:32**

என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதிருப்பீர்களாக.

**சங்கீதம் 29:2**

கர்த்தருடைய நாமத்திற்குரிய
மகிமையை அவருக்குச்
செலுத்துங்கள்;
பரிசுத்த அலங்காரத்துடனே
கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.

மேற்கண்ட வசனங்களைப் பார்க்கும்பொழுது, ஓய்வுநாளைக் குறித்தும், அவருடைய நாமத்தைக் குறித்தும் தேவனுக்கு இருக்கும் வைராக்கியத்தை காண்கிறோம்.

இன்று உங்களுக்கும் ஒரு வைராக்கியம் தேவை.

**1 பேதுரு 1:14ல்** கூறப்பட்டுள்ள ஆலோசனையை வாசியுங்கள்.

**நீங்கள் முன்னே உங்கள்
அறியாமையினாலே
கொண்டிருந்த இச்சைகளின்படி
இனி நடவாமல், கீழ்ப்படிகிற
பிள்ளைகளாயிருங்கள்.**

**எபேசியர் 6:1**

**பிள்ளைகளே, உங்கள்
பெற்றாருக்கு கர்த்தருக்குள்
கீழ்ப்படியுங்கள். இது நியாயம்.**

**ஏன் நாம் பரிசுத்தமாய் வாழவேண்டும்.**

ஒரே ஒரு காரணம்: **நம்மை அழைத்தவர் பரிசுத்தமுள்ளவர்.**

**பரிசுத்த குலைச்சல் முதலாவது எங்கே ஏற்படுகிறது?**

**மத்தேயு 15:19,20**

எப்படியெனில், இருதயத்திலிருந்து
பொல்லாத சிந்தனைகளும்,
கொலைபாதகங்களும்,
விபசாரங்களும்,வேசித்தனங்களும்,
களவுகளும், பொய்ச்சாட்சிகளும்,
தூஷணங்களும், புறப்பட்டுவரும்.
இவைகளே மனுஷனை
தீட்டுப்படுத்தும்.

ஆதலால்தான் இருதயத்தைக் குறித்து வேதம் மிக திட்டமாக பின்வருமாறு கூறுகிறது:–

**நீதிமொழிகள் 4:23**

எல்லாக் காவலோடும்
உன் இருதயத்தைக் காத்துக்கொள்,
அதினிடத்தினின்று
ஜீவ ஊற்று புறப்படும்.

ஆம்! ஜீவ ஊற்றாகிய பெரும் அற்புதங்கள் அனுதினம் புரண்டோடிக் கொண்டேயிருக்கும். ஆமென்!

**எரேமியா 17:9**

எல்லாவற்றைப்பார்க்கிலும்
இருதயமே திருக்குள்ளதும்
மகா கேடுள்ளதுமாயிருக்கிறது.
அதை அறியத்தக்கவன் யார்?

என் அன்பு தேவ பிள்ளைகளே!

உங்கள் வாழ்க்கையில் ஒரு அற்புதத்தைப் பெற இன்றே உங்கள் இருதயத்தை சீர்தூக்கிப் பாருங்கள்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்.

**பிரசங்கி 7 :16**

**மிஞ்சின நீதிமானாயிராதே.**
**உன்னை அதிக ஞானியு**
**மாக்காதே. உன்னை நீ ஏன்**
**கெடுத்துக் கொள்ள வேண்டும்.**

**1யோவான் 1:8,9** நமக்குப் பாவமில்லை யென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவருமாயிருக்கிறார்.

ஆதலால் இயேசுவின் இரத்தத்திற்குள் மீண்டும் ஒரு முறை அர்ப்பணியுங்கள். அவருடைய இரத்தத்தால் கழுவப்பட ஒரு விசை ஒப்புக் கொடுங்கள்.

**பக்தன் பாடுகிறான்:**

**சுத்தம் விரும்பும் சுத்த ஜோதியே**
**விரும்பா அசுத்தம் யாவும் போக்குமே**
**பாவி நீச பாவி நானையா**
**தேவா இரக்கம் செய்யமாட்டீரோ.**

– எனபாடுங்கள்! பாடுங்கள்! பாடிக்கொண்டேயிருங்கள்.

**"தேவா இரக்கம் செய்யமாட்டீரோ"** எனப்பாடுகிறீர்கள் அல்லவா? **அது எதற்காக தெரியுமா?**

அதுதான் நீங்கள் விரும்பும் அந்த அற்புதம். உங்கள் அற்புதத்தை நாளை பெற, **இன்று உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்.**

**"இருதயத்தின் கசப்பு**
**இருதயத்திற்கே தெரியும்"**

ஆதலால் ஒரு விசை உங்கள் இருதயத்தை கர்த்தரிடத்தில் ஊற்றுங்கள்.

**பக்தன் பாடுகிறான்:**

**கசந்த மாரா மதுரமாகும்**
**வசந்தமாய உன் வாழ்க்கை மாறும்**
**கண்ணீரோடே நீ விதைத்தால்**
**கெம்பீரமாய் அறுத்திடுவாய்.**
**இன்று கண்ட எகிப்தியனை,**
**என்றுமே நீ இனி காண்பதில்லை.**

ஆதலால் பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்

**என்னை பரிசுத்தம்**
**பண்ணிக்கொள்வேன்.**
**நாளைக்கு என் நடுவில் கர்த்தர்**
**அற்புதங்களைச் செய்வார்.**

ஆமென்! **மெய்யாகவே அற்புதங்களைக் காண்பீர்கள்.**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## திருவண்ணாமலை - புதுப்பாளையம் யூனியன்
## 100 - கிராம ஊழியம்

***நோக்கம்:*** **2008 ஆகஸ்டு 18** திங்கள் காலை 9 மணி முதல் **ஆகஸ்டு 22** வெள்ளி இரவு 10 மணி முடிய **திருவண்ணாமலை மாவட்டம் - புதுப்பாளையம் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2008 ஆகஸ்டு 18** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2008 ஆகஸ்டு 22** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2008 ஆகஸ்டு 18 - 22 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM **காரியதரிசி.**
**C/o கிறிஸ்துநாதர் ALC சர்ச்,**
**செங்கம் கண் ஆஸ்பத்திரி - அருகில்,**
**செங்கம் - 609 709.**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**போன் : 04188 - 222890.**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த **Bro.R.தாஸ்** & குழுவினருக்கும் நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும்** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# கோயம்புத்தூர் - குடிமங்கலம் யூனியன் 100-கிராம ஊழியம் அறிக்கை

**THANKS: Patmos (Dr.Tor & Sis. Fera)**




கர்த்தருடைய கிருபையால் 2008 ஜுன் மாதம் 16ம் தேதி முதல் 20ம் தேதி வரை கோயம்புத்தூர் மாவட்டம் – குடிமங்கலம் யூனியனில் 100–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள் கூடுமிடம், உணவு இவைகளை குடிமங்கலம் **பாஸ்டர் எபிநேசர்** அவர்களும், கடைசிநாள் கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை **பாஸ்டர் தோமா** அவர்களும் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 49 கிராம ஊழியர்கள் இந்த ஊழியத்தில் வந்து கலந்து கொண்டு, 5 நாட்கள் ஊழியம் செய்தார்கள்.

முதல்நாள் ஜெபத்தில் **குடிமங்கலம்** யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதில் **பாஸ்டர் தோமா** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். TVGM ஸ்தாபகர் சகோ. P.T.கிறிஸ்டோபர் அவர்கள் கிராம ஊழியர்களுடைய சாட்சிகளைக் கேட்டு, ஜெபித்து உற்சாகப்படுத்தினார்கள். இதன்பின் ஊழியர்களை 12 குழுக்களாக பிரித்து,ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் தாங்கள் செல்லும் கிராமங்களுக்காக தனித்தனியாக ஜெபித்தார்கள். மதிய உணவிற்குப் பின் 12 குழுவினரும் கிராமங்களுக்குள் ஜெபித்து அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் போய் கிராமங்களில் தங்கிக் கொண்டு, கிடைக்கிற இடங்களில் சாப்பிட்டுக் கொண்டு 5 நாட்கள் ஊழியம் செய்தனர். மொத்தம் 12,039 வீடுகளுக்கு வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷப் புத்தகம் இலவசமாக கொடுத்து, கர்த்தருடைய நற்செய்தியை அறிவித்து ஊழியம் செய்தார்கள். இதோடு 18,000 கைப்பிரதிகள், 9500 சிலுவைக் கொடிகள் இலவசமாக வழங்கி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள்.

இப்படி 5 நாட்கள் ஊழியங்களை முடித்து, மீண்டும் முன்பு கூடிய இடத்தில் கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியாக கூறி தேவனை மகிமைப் படுத்தினார்கள். இந்த ஊழியத்தின்போது 153பேர் தங்கள் விலாசங்களை கொடுத்து வேதபாடங்களை தபால் மூலம் அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.

இந்த கடைசிநாள் ஜெபக்கூட்டத்தை **பாஸ்டர் தோமா** அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். இதில் உடுமலைப்பேட்டையிலுள்ள போதகர்கள் அநேகர் கலந்துகொண்டு கிராம ஊழியர்களின் சாட்சிகளை கேட்டு ஆச்சரியப்பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். இதில் போத்தனூர் **பாஸ்டர் ஜோசப் ஜெரால்டு** அவர்கள் கலந்து கொண்டு தேவசெய்தி கொடுத்தார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**<u>குழு 1:</u> சகோதரி எஸ்தர் கனகாம்புஜம் தெரசாபேபி, ஜோதி, கிரேஸ் லட்சுமி.**

பூளவாடி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை கூறினோம். ஒரு வாலிபன் எங்களை மதம் மாற்றம் செய்ய வந்திருக்கிறீர்களா? உங்களை போலீசில் சொல்லுவேன் என்றான். அவனிடம் இந்த புத்தகத்தைப் படித்துப் பார், உனக்கு ஒரு தெய்வீக சமாதானம் உண்டாகும் என்று சொன்னோம். அநேக வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்து வந்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்களும்,800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 2:</u> சகோ. மாற்கு மாரியப்பன், சாம்ராஜ், மகாராஜன்.**

அப்பிலியபட்டி கிராமத்தில் குமரன் என்பவரிடம் சுவிசேஷம் கூறியபோது, அவர் நாங்கள் 10 குடும்பம் சேர்ந்து ஒரு கல்லை நட்டு வைத்து அதை எங்கள் குல தெய்வமாக வழிபட்டு வருகிறோம். இதை விட்டு நாங்கள் அடுத்த தெய்வத்தை வழிபட முடியாது என்று சொன்னார். நாங்கள் கல்லை உருவாக்கியவர் கர்த்தர் இயேசு என்னும் கடவுள். அப்படியிருக்க அந்த கல் எப்படி தெய்வமாக முடியும் என்று கேட்டபோது அவர் திகைத்துப் போனார். **சகலத்தையும் உருவாக்கின தேவனையே வழிபடுங்கள்** என்று கூறியபோது ஒத்துக்கொண்டார். கள்ளப்பாளையம் கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்துக் கொண்டு வரும்போது ஒரு சகோதரன் தன் வீட்டில் போட்ட சுவிசேஷப் புத்தகத்தையும், அடுத்த வீட்டில் போட்ட புத்தகத்தையும் எங்களை திரும்ப எடுத்து கொண்டு போகச் சொன்னார். அப்படி எடுத்துக் கொண்டு போகாவிட்டால் உங்கள் கை கால்களை முறித்துவிடுவேன் என்று கோபமாக சொன்னார். நாங்கள் புத்தகத்தை எடுத்துக் கொண்டு திரும்பி வந்துவிட்டோம். மொத்தம் 709 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 3:</u> சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், தேவகிருபை,லீதியாள், சலோமி சம்மனசு.**

ஆத்துக்கிணத்துப்பட்டி ஊராட்சியிலுள்ள 6 கிராமங்களுக்கு சென்று வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். சிலருக்காக ஜெபித்தோம். எல்லோரும் வாஞ்சையோடு வாங்கினார்கள். கொள்ளுப்பாளையத்தில் புத்தகம் கொடுத்துக் கொண்டு வரும் போது, ஒரு ஆள் வந்து இனி இந்த கிராமத்தில் இப்படி புத்தகம் கொடுத்தால் கை கால்களை ஒடித்து விடுவேன் என்று சொன்னான். நாங்கள் எதுவும் சொல்லாமல் அடுத்த கிராமத்திற்குப் போய் ஊழியம் செய்தோம். 1100 சுவிசேஷப் புத்தகமும், 800சிலுவைக்கொடியும் கொடுத்தோம்.

**<u>குழு 4:</u> சகோ. தாஹாகனி, முத்து, சூசைமாணிக்கம், சவரிராஜ்.**

குடிமங்கலம் ஊராட்சியிலுள்ள 6 கிராமங்களில் யோவான் சுவிசேஷப் புத்தகம், கைப்பிரதிகள், சிலுவைக்கொடிகளைக் கொடுத்தோம். பத்ரகாளிபுதூரில் ஒருவருக்கு அடிக்கடி மயக்கம் வருவதாக சொன்னார். அவருக்காக ஜெபித்தபோது கர்த்தர் விடுதலை கொடுத்தார். இன்னும் முத்துசமுத்திரம், மசக்கவுண்டன் புதூர், வேலப்பநாயக்கன்புதூர் ஆகிய கிராமங்களிலும் மக்கள் ஆர்வமுடன் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கினார்கள். குடிமங்கலத்தில் ஒரு சில வீடுகளில் யோவான் புத்தகம் வாங்க மறுத்து விட்டார்கள். 750 சுவிசேஷப் புத்தகங்கள், 700 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 5:</u> பாஸ்டர் ஆல்வின், சகோ. பவுல் கோபால், எபிநேசர், தாவீது தங்கவேல்**

நாங்கள் வரதராஜபுரம், கோட்ட மங்கலம், வெள்ளியம்பாளையம், குமார பாளையம் ஆகிய ஊர்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். ஒரு சிலர் புத்தகம் வாங்கவில்லை. கால் ஒடிந்து வேதனை யுடன் இருந்த ஒரு பெரியவருக்காக ஜெபித்தோம். உதட்டில் கேன்சர் உள்ள ஒரு பெண்ணுக்கும் சத்தியம் கூறி விடுதலை பெற ஜெபித்தோம். 1250 சுவிசேஷப்புத்தகங்களும்,720 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 6:</u> சகோதரி மாலா, தெபோராள், சமாதானமேரி.**

நாங்கள் கொண்டம்பட்டி ஊராட்சியிலுள்ள சனுப்பட்டி, வல்லகுண் டாபுரம், லிங்கநாயக்கன்புதூர், சுங்கார மடக்கு ஆகிய கிராமங்களில் வீடுவீடாக சென்று யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து,**இயேசுவே உலக இரட்சகர்** என்பதை எடுத்துக் கூறினோம். 700 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு7:</u> சகோ. ஆரியப்பன், செல்வராயர் பால், ஜெபமலைநாதன், ஜான் அழகப்பன்.**

நாங்கள் பெதப்பம்பட்டி கிராமத்தில் வீடுவீடாகப் புத்தகங்களை கொடுத்துக் கொண்டு வரும்போது 5 வாலிபர்கள் எங்களை வழிமறித்து ஏண்டா இங்கு வந்து உங்கள் புத்தகத்தை கொடுக்கிறாய் ? யார் கொடுக்கச் சொன்னது ? எத்தனை பேர் வந்திருக் கிறீர்கள் ? என்று கேட்டு, எங்கள் இந்து கோவிலுக்கு வந்து தீப ஆராதனை செய்து கீழே விழுந்து வணங்க வாங்கடா என்று கூப்பிட்டார்கள். நாங்கள் வர மாட்டோம் என்று மறுத்தபோது, அவர்க ளுடைய தலைவருக்கு தகவல் கொடுத்து அதன்பின் எங்களை போலீஸ் நிலையத்திற்கு கூட்டிச் சென்றார்கள். போலீஸ்காரர்கள் எங்களை விசாரித் தார்கள். பிறகு இத்துடன் இப்படி புத்தகம் கொடுப்பதை நிறுத்தி விட்டு உடனடியாக புறப்பட்டு போய்விடுங்கள் என்றார்கள். ஆனால் அந்த கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் போலீசிடம், 'எங்களிடம் இனி இதுபோன்று புத்தகம் கொடுக்க மாட்டோம். மதமாற்றம் செய்ய மாட்டோம்' என்று எழுதி வாங்கும்படி வற்புறுத்தினார்கள். ஆனால் போலீஸ்கா ரர்கள் அந்த எதிர்ப்பாளர்களை சமாதானப் படுத்தி அனுப்பி விட்டார்கள். எங்களிடம் எதுவும் எழுதி வாங்கவில்லை. பிறகு அந்த போலீஸ்காரர்களே எங்களுக்கு டீ வாங்கி கொடுத்து பஸ் ஏற்றி அனுப்பி விட்டார்கள். நாங்கள் அதன்பின்பு வேறு கிராமங்களில் ஊழியம் செய்தோம். மொத்தம் 1445 சுவிசேஷப் புத்தகங்களும், 730 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 8:</u> பாஸ்டர் ஆனந்தராஜ், ஏசுதாஸ், ஸ்டீபன்பராஜ், யோசுவா.**

நாங்கள் குப்பம்பாளையம், வெள்ள செட்டிப்பாளையம், அம்மாபட்டி ஆகிய கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங் களைக் கொடுத்து அநேகருக்காக ஜெபித்தோம். ஒவ்வொருநாளும் மதிய வேளையில் எங்களைப் பார்த்தவர்களில் சிலர் மதியஉணவு ஓட்டலில் சாப்பிடும்படி சொல்லி உபசரித்தார்கள். சாலையூர் கிராமத்திற்கு பஸ் வசதியே இல்லை. ஆனாலும் நாங்கள் நடந்தே சென்று அங்குள்ள மக்களை சந்தித்து சுவிசேஷம் அறிவித்தோம். 1085 புத்தகங் களும், 750 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு9:</u> சகோதரி மரியம்மாள், கஸ்தூரி சுப்பையா, மேரி மீனா, எஸ்தர் பேபி, கிருபா பழனியம்மாள்.**

நாங்கள் வீதப்பட்டி என்ற கிராமத்திற்கு சென்றபோது இங்கு எட்வர்டு என்பவர் இந்த கிராமத்தில் யாராவது வந்து கைப்பிர திகள், சுவிசேஷப் புத்தகங்கள் கொடுக்க

வரமாட்டார்களா என்று ரொம்ப காலமாக எதிர்பார்த்து ஜெபித்து கொண்டிருந்ததாக சொல்லி எங்களைக் கண்டதும் சந்தோஷத்துடன் வரவேற்று ஊழியம் செய்ய உதவி செய்தார்கள். மூலங்கில்தொழுவு என்ற கிராமத்தில் 14 வயதுள்ள மகேந்திரன் என்ற பையன் எங்களிடம் ஐயோ! இந்த புத்தகத்தை நாங்கள் வாங்கக் கூடாது, வாங்க மாட்டோம். நான் பெருமாள் மந்திரம் 101 சொல்லி ஈரத்துணியுடன் நின்று வணங்குவேன் என்றான். நாங்கள் அவனிடம் நீ தான் இயேசுவுக்கு வேண்டும். பக்தியுள்ள உன்னை இயேசு காலம் வரும்போது இரட்சிப்பார் என்று சொல்லி விட்டு வந்தோம். ஆனால் அவன் எங்கள் பின்னாலேயே வந்துகொண்டிருந்தான். மீண்டும் அவனிடம் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, அவன் அதை அந்த பக்கத்து வீட்டில் கொடுத்து விட்டு போங்கள். நான் பெருமாள் மந்திரம் சொல்லி விட்டு வந்து அந்த உங்கள் புத்தகத்தைப் படிக்கிறேன் என்றான். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு10:</u>சகோதரி வசந்தா ஸ்டீபன், ஜெபமணி, கிரேஸ் பத்மா, சாராள், கிளமெண்ட்ஸ்மேரி.**

நாங்கள் அம்மாபட்டி, ராமசந்திராபுரம், சிந்திலப்பட்டி, ஆமந்தக்கடவு ஆகிய கிராமங்களில் ஊழியம் செய்தோம். பெரியவர், சிறியவர், வாலிபர் யாவரும் சுவிசேஷத்தை ஆர்வமுடன் கேட்டார்கள். அநேகர் ஜெபிக்கக் கேட்டார்கள். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 700 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு11:</u>சகோதரி டோரா லாசர், ஷீலா, அமிர்தம், லூயிஸ் அம்மாள்,அன்னாள்**

நாங்கள் சென்ற கிராமங்களில் வரவேற்பும் இல்லை. எதிர்ப்பும் இல்லை. ஒரு பெரியம்மாவிடம் இயேசுவைப் பற்றி சொன்னபோது, அவர் நான் சுடுகாடு போனால் போதும் உங்கள் சாமி வேண்டாம் என்றார். ஒரு வாலிபரிடம் சத்தியத்தைச் சொன்னபோது ஆர்வமாக கேட்டார். அவருடைய விலாசத்தையும் கேட்டு எழுதிக் கொண்டோம். அவருடைய ஊரில் உள்ள சிலர் அவரை நீ இயேசுவாக மாறி விட்டாய் என்று சொன்னதைக் கேட்டு எங்கள் பின்னே வந்து என் பெயரை அழித்து விடுங்கள். அந்த பேப்பரையே கிழித்து விடுங்கள் என்று சொன்னார். நாங்கள் வேறு ஒரு கடுதாசியை அவர் முன் கிழித்ததும் சமாதானத்துடன் சென்றார்.1000 சுவிசேஷப் புத்தகங்களும் 950 சிலுவைக்கொடியும் கொடுத்தோம்.

**<u>குழு12:</u>சகோ.இஸ்ரவேல், இஸ்தாக்கி, ராஜு,**

எங்களுக்கு கொடுத்திருந்த வடுக பாளையம் ஊராட்சியிலுள்ள 4 கிராமங்களுக்கு சென்று வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். பெரும்பாலான வீடுகளில் ஜெபிக்கச் சொன்னார்கள். அவர்களுக்காக ஜெபித்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக்கொடி களும் கொடுத்தோம்.**தேவனுக்கே மகிமை!**

**TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளின் படிப்பு செலவு**

2008 -2009ம் ஆண்டு கல்வியாண்டில் நமது இரு சிறுவர் இல்லத்திலுள்ள 70 பிள்ளைகளுக்கும் ஸ்கூல் யூனிபார்ம், நோட்டு புத்தகங்கள், ஸ்கூல் பீஸ் ஆகியவற்றிற்கு உத்தேசமாக ரூ.70,000 தேவைப்படுகிறது.

கர்த்தரால் ஏவப்படுகிறவர்கள் உங்களால் இயன்ற தொகையை **TVGM Social Service, Canara Bank, Puthur Branch, Trichy** பெயரில் டிராப்ட் அல்லது செக் எடுத்து கடைசி பக்கமுள்ள **TVGM** தலைமை அலுவலக முகவரிக்கு அனுப்பி உதவுங்கள்.

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே

1. Sis. **வசந்தகுமாரி, இடையன்குடி,**

என் மகன் நவீனுக்கு பல வருடங்களாக திருமணகாரியம் தடை பட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் மிகவும் கவலையோடு ஜெபம் செய்து கொண்டிருந்தோம். ஒரு நாள் ஒரு கடையில் பொருள் வாங்கும்போது உங்கள் **"100–கிராம ஊழியம்"** பத்திரிக்கையின் ஒரு பேப்பரில் பொருளை கடைக்காரர் கொடுத்தார். அது 2007 ஏப்ரல் மாத பத்திரிக்கை. அதில் **ஏற்றத் துணையை உண்டாக்குவேன்** (ஆதி.2:18) என்ற தலைப்பில் செய்தி இருந்தது. அதில் உங்கள் கண்கள் அங்கும் இங்கும் பார்க்க வேண்டாம். அதுவோ இதுவோ என குழம்ப வேண்டாம். கர்த்தரையே நோக்குங்கள். அவர் கூட்டிக் கொண்டு வருவார். உங்களைத் தேடி வருவார்கள் என்ற வார்த்தைகள் இருந்தது. எனவே நானும் அதில் உள்ள வாக்குத்தத்தத்தை சொல்லி தினமும் ஜெபித்தேன். 2007 நவம்பர் மாதம் ஒரு பெண் வீட்டார் வரவும். 28.12.2007 அன்று நிச்சயம் செய்யவும், 28.01.2008 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார்.

2. Sis. **மெட்டில்டா, சென்னை.**

என் மகளின் 10ம் வகுப்பு தேர்விற்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் தங்களின் ஜெபத்தைக் கேட்டு மகள் 442 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார். தேவனுக்கே மகிமை.

3. Sis. **லிடியா, பெங்களூர்.**

என் மகளின் +2 தேர்விற்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் தங்கள் ஜெபத்தைக் கேட்டு 2nd classல் பாஸ் பண்ண கிருபை செய்தார்.

4. Sis. **புனிதா, ஈரோடு.**

என் திருமண காரியத்திற்காக ஜெபிக்க தங்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டார். வருகிற 2008 செப்டம்பர் 3ம் தேதி திருமணம் நடக்கப் போகிறது. தேவனுக்கே மகிமை.

5. Sis. **ரேணுகாதேவி, மதுரை,**

என் அம்மாவுக்கு இருமல், இழுப்பு வியாதி, வயிறு வலி இவைகளிலிருந்து சுகம் கிடைக்கும்படி ஜெபிக்கக் கேட்டிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அம்மாவுக்கு பூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.

6. Sis. **மெல்வின், கன்னியாகுமரி.**

நான் பாலிடெக்னிக் முதலாம் ஆண்டு படிக்கிறேன்.முதல் செமஸ்டரில் எல்லா பாடங்களிலும் தேர்ச்சி பெற்றேன். இரண்டாம் செமஸ்டரில் Engineering Graphics என்ற பாடம் கடினமாக இருந்தது. நான் அந்த பாடத்தில் வெற்றி பெற்றால் 100 கிராம பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு தேர்வில் வெற்றி பெற செய்தார்.

7. Sis. **மகதலேன் மேரி, சிவகங்கை.**

என் மகனுக்கு திருமணம் நடைபெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு மகனுக்கு திருமணம் நடைபெறவும், டெம்போ வேன் வாங்கவும் உதவி செய்தார்.

8. Bro. **ராமசந்திரன், சேலம்.**

என் M.Sc இரண்டாம் ஆண்டு தேர்விற்காக ஜெபிக்க கேட்டிருந்தேன். கர்த்தரின் கிருபையால் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளேன்.

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே

1. Sis. **சுப்புலட்சுமி, விருதுநகர்.**

நான் கம்ப்யூட்டர் வகுப்பில் சேர்ந்தால் ரூ.100 /– காணிக்கை அனுப்புவதாக பொருத்தனையோடு ஜெபம் செய்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு கம்ப்யூட்டர் வகுப்பில் சேர உதவி செய்தார்.

2. Sis. **சத்தியா, தஞ்சாவூர்.**

நானும், என் தோழியும் 9ம் வகுப்பில் தேர்ச்சி பெற வேண்டுமென கடிதம் எழுதியிருந்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு வெற்றி பெற செய்தார்.

3. Sis. **தீபா, கடலூார்.**

என் தாத்தாவிற்கு கால் சரியில்லை என்று குணமாகும்படி தங்களிடம் ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகத்தைத் தந்தார். இப்பொழுது தாத்தா நன்றாக இருக்கி றார்கள். தேவனுக்கே மகிமை.

4. Sis. **சியாமளாதேவி, திருவாரூர்.**

நான் +2வில் அதிக மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற வேண்டுமென அனுதினமும் ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 932 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார்.

5. Sis. **சீத்தாலட்சுமி, சிவகங்கை.**

என் மகன் பழனிச்சாமி திருமணத் திற்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். உங்கள் ஜெபத்தினால் எந்த பிரச்சனையும் இல்லாமல் பெண் கிடைக்க கர்த்தர் உதவி செய்தார்.

6. Bro. **பிரதீப், சேலம்.**

நான் 10ம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு தேர்வில் வெற்றி பெற செய்தார்.

6. Sis. **ரேணுகா தேவி, ஈரோடு.**

என் மகள் 10ம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற வேண்டுமென தங்களுக்கு ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு வெற்றி பெற உதவிச் செய்தார்.

7. Bro. **ஜீவகாந்தி, கோவை.**

என் மகனுக்கு மஞ்சகாமாலை நோய் குணமாகும்படி தங்களுக்கு ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் மகனுக்கு நோயிலிருந்து பூரண சுகத்தைக் கொடுத்தார்.

8. Sis. **பாப்பா, சிவகங்கை.**

என் சித்தி மகன் 10ம் வகுப்பு தேர்வில் வெற்றி பெறும்படி தங்களுக்கு ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 400 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார்.

**2008 ஆகஸ்டு மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : ஈரோடு
யூனியன் : காங்கேயம்
நாள் : 30.08.2008 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் K.C. சாமுவேல்**
**A.G. சர்ச்,**
**2/54,திருவள்ளுவர் 3வது தெரு,**
**திருப்பூர் ரோடு,**
**காங்கேயம் – 638 701.**
**ஈரோடு மாவட்டம்.**
**போன் : 04257 - 222683**
**செல்: 9942311128**

## 2008 ஜுன் மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை



கர்த்தருடைய கிருபையால் கரூர் மாவட்டம் – K.பரமத்தி யூனியன் சின்னதாராபுரம் BCI சர்ச்சில் **28.06.2008** அன்று **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை **பாஸ்டர் ஜோசுவா** ஒழுங்கு செய்திருந்தார்கள்.

இம்முகாமில் கலந்து கொள்ளும்படி K.பரமத்தி யூனியனிலிருந்து TVGM உடன் கடிதத்தொடர்பு கொண்டுள்ள 52 புறமத நண்பர்களுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டது. இவர்களில் 2 ஆண்கள், 8 பெண்கள் ஆக மொத்தம் 10 பேர் கலந்து கொண்டார்கள்.

இவர்களுக்கு உண்மையான தெய்வம் யார் என்றும், சபைக்கு வருவதின் அவசியம் குறித்தும் விளக்கமாக கூறப்பட்டது. இவர்கள் அதை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். பின்பு தங்களது தேவைகள், பிரச்சனைகளை சொல்லி ஜெபிக்கக் கேட்டுக் கொண்டார்கள். **பாஸ்டர் ஜோசுவா** தனது சாட்சியை கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். தும்பிவாடி BCI **பாஸ்டர் ஏனோக்கு** அவர்களும் கர்த்தருடைய வார்த்தையை சொல்லி உற்சாகப்படுத்தினார்கள்.

TVGM ஊழியங்களைப் பற்றியும், தேவைகள் பற்றியும் கூறியபோது ஆர்வமாக கேட்டார்கள். தங்கள் திராணிக்குத் தக்கதாக மனப்பூர்வமாய் காணிக்கை கொடுத்தார்கள். இவர்கள் யாவருக்காகவும் விசேஷமாக ஜெபிக்கப்பட்டது. பின்பு BCI சர்ச் சார்பில் எங்களுக்கும் வந்திருந்தவர்களுக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. மதியம் 3 மணியளவில் ஜெபித்து முகாம் முடித்து வைக்கப்பட்டது.

***தேவனுக்கே மகிமை உண்டாவதாக!***

## 12 மணி நேர துதி ஆராதனை

நான் 31.05.08 அன்று நடந்த நடுஇரவு ஜெபத்திலும், மறுநாள் நடந்த துதி ஆராதனையிலும் பங்கு பெற கர்த்தர் உதவி செய்தார். எனக்கு அரசு ஊதிய நிலுவை பல ஆண்டுகளாக தாமதித்து வந்தது. அது பற்றி மேல் முறையீடு செய்வது தேவசித்தம் தானா ? என்ற கேள்வி எனக்குள் இருந்தது. 01.06.08 அன்று 1சாமுவேல் 30:8 வசனத்தை தாங்கள் வாக்குத்தத்தமாக வழங்கியதால் தற்போது மேல்முறையீடு செய்துள்ளேன். ஆண்டவர் என்னோடு பேசியதற்காக நான் தேவனைத் துதிக்கிறேன். மகிழ்ச்சியடைகிறேன்.

**சகோ. ஜான் சுகுமார் பிரின்ஸ், திருச்சி.**

**இடம் :** டி.வி.ஜி.எம். தலைமையிடம் 100–கிராமம், திருச்சி.

**நாள் : 01.08.2008** செவ்வாய்

**துதி ஆராதனை நேரம்:**
காலை 7 மணி முதல் மாலை 7 முடிய

**வாக்குத்தத்த செய்தி நேரம்:**
மாலை 7 முதல் 8 மணி வரை

**வாக்குத்தத்த தேவசெய்தி:**
**சகோ. பி.டி.கிறிஸ்டோபர்**
**டி.வி.ஜி.எம். ஸ்தாபகர்**

பகலில் உங்களுக்கு வசதியான நேரம் வந்து கலந்துகொள்ளலாம்.

# 100 கிராம ஊழிய திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்ட சுவிசேஷப் பணி AJC - நடமாடும் சுவிசேஷக் குழு

கர்த்தருடைய கிருபையால் புதுக்கோட்டை – கரம்பக்குடி யூனியனில் 21.04.08 முதல் 23.04.08 முடிய 100 கிராம ஊழியம் AJC நடமாடும் சுவிசேஷக் குழு மூலமாக ஆசீர்வாதமாக நடைபெற்றது. AJC ஊழியர்கள் 16 பேர் 3 நாட்கள் பங்கேற்றனர். இந்த ஊழியத்தின் மூலம் 122 பேர் தங்கள் விலாசங்களைக் கொடுத்து வேதபாடம் அனுப்பக் கேட்டுக் கொண்டனர்.

## கிராம ஊழியர்களின் சில முக்கிய அனுபவ சாட்சிகள்:-

**குழு 1: சகோ. யோனத்தான், எபன், சைலஸ், ரீகன்ராஜ்:-**

நாங்கள் சென்ற இலைகடிவிடுதி, கருங்குழிக்காடு, மஞ்சுவிடுதி கிராமங்களிலுள்ள அநேகர் நாங்கள் அறிவித்த இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை வாஞ்சையோடு ஏற்றுக் கொண்டனர். ஒரு சிலர் ஆலயமில்லாததால் ஆலயத்திற்குப் போக முடியவில்லையே என மனவேதனை அடைந்தனர். கரம்பக்குடி ஆலயத்திற்கு வருவதாகச் சொல்லி முகவரியும் தந்துள்ளனர். 50 சிறுபிள்ளைகளுக்கு சுவிசேஷம் அறிவித்தோம். மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். செவ்வாய் இரவு 8 மணிக்கு வைத்திருந்த கூடுகையில் அநேகர் கூடினர். அதில் பிசாசு பிடித்திருந்த இருவர் விடுதலையடைந்தனர். இயேசுவை ஏற்றுக்கொண்டனர். கணவன், மனைவி இருவர் தங்களை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தனர்.

**குழு 2: சகோ. ஜெனின், இம்மானுவேல்:-**

நாங்கள் இருவரும் மருதன்கோன்விடுதி கிராமத்திற்கு சென்று சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். எல்லோரும் மகிழ்ச்சியோடு பெற்று படித்தனர். ஒரு சகோதரியிடம் இயேசுவைப் பற்றி சொன்னபோது, ஆலயம் வருவதாகக் கூறினார். கால்,கை பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பெரியவருக்கு எண்ணெய் பூசி ஜெபித்தோம். தொடர்ந்து அவருக்காக ஜெபிக்கக் கேட்டுக் கொண்டார். அந்த வீட்டில் கூடி வந்த அனைவருக்கும் இயேசுவைப் பற்றி சொன்னோம். யாவரும் ஏற்றுக் கொண்டனர். வேறொரு தெருவில் புத்தகம் கொடுத்தபோது, ஒருவர் பெற்றுக் கொண்டார். வேறொருவர் புத்தகத்தை வாங்கி கசக்கிக் கொண்டு "ஏண்டா எங்க ஊர் மக்களை மதம் மாற்ற வந்திட்டீர்களா ? புத்தகத்தை வாங்கிக்கிட்டு ஓடு" எனச் சொன்னார். நாங்கள் உடனே அதை வாங்கி பக்கத்து தெருவில் கொடுத்தோம்.

**குழு 3:சகோ. ஐசக் முத்தமிழ்ராஜ், ஆரோக்கியசாமி:-**

சின்னான் கோன்விடுதி, மணமேடை கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம், சிலுவைக்கொடி கொடுத்து அநேக வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மணமேடை கிராமத்தில் மூன்று மாதமாய் வியாதியாயிருந்து மருத்துவரால் கைவிடப்பட்ட பூங்கோதை என்ற தாயாரை சந்தித்து அவருக்காக ஜெபித்தோம். ஜெபித்த அந்த நாள் இரவிலேயே தேவன் சுகம் கொடுத்தார். கடலாத்திபட்டி பகுதிக்கு மினிபஸ் சரியான நேரத்துக்கு இல்லாததால் 15 கி.மீ.தூரம் நடந்து போகும்படி இருந்தது. நடக்க ஆரம்பித்த 5வது நிமிடத்தில் கரம்பக்குடி TELC **பாஸ்டர் இம்மானுவேல்** வந்து,

நாங்களும் இந்தப் பகுதியில் ஊழியத்திற்குத் தான் வந்தோம் என்று சொல்லி மீதியிருந்த ஊர்களிலும் சென்று நாங்கள் ஊழியத்தை முடிக்க வாகன உதவி ஏற்படுத்திக் கொடுத்தார். மணமேடையில் 20 குடும்பங்கள் கூடி வீட்டு ஜெபம் ஆரம்பிக்கக் கேட்டுள்ளனர். தேவனுக்கே மகிமை.

**குழு 4:சகோ. ஐசக், ஜீவா சுந்தர்:-**

நாங்கள் இருவரும் பல்லவராயன்பத்தை பஞ்சாயத்தை சேர்ந்த கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம், சிலுவைக்கொடி கொடுத்து ஊழியம் செய்தோம். தேவன் எங்களுக்கு திறந்த வாசலை வைத்திருந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**குழு 5:சகோ. ஜான் நேசக்குமார், ஏஞ்சல், நேசமேரி:-**

நாங்கள் கீராத்தூர் பஞ்சாயத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்று வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சுவிசேஷம் அறிவித்தோம். மக்கள் வாஞ்சையுடன் ஏற்றுக் கொண்டனர். உளவயல் என்ற கிராமத்தில் இதயநோய் உள்ள ஒருவருக்கு புத்தகம் வழங்கினோம். அவர் ஏற்றுக் கொண்டு விசுவாசித்தார். லதா, கலைமணி என்பவர்களுக்காக ஜெபித்தோம். அவர்கள் ஆலயம் வருவதாக சொல்லி முகவரியும் கொடுத்தனர். கீராத்தூர் கிராமத்தில் 200 வீடுகளுக்கு சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். வாரந்தோறும் எங்கள் வீடுகளுக்கு வந்து ஜெபியுங்கள் என அநேகர் கேட்டுக் கொண்டனர். 1 மாதகாலமாக உடல் நடுக்கத்தில் இருந்த ஒரு சகோதரி தனக்காக ஜெபிக்க வேண்டினார். நாங்கள் ஜெபித்தோம். ஆலயம் வருவதாகக் கூறினார். பாப்பாப்பட்டி பகுதியில் புத்தகங்கள் கொடுத்தபோது, செந்தில்குமார் என்ற மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு சகோதரருக்காக ஜெபித்தோம். அன்று இரவு அவர் நன்றாக தூங்கியதால் விசுவாசித்து ஆலயத்திற்கு வந்து விட்டார். பிராமணர் ஒருவருக்கும் புத்தகம் கொடுத்தோம். பெற்றுக் கொண்டு வினவவும் செய்தார். முஸ்லீம் மக்களும் உற்சாகமாக வாங்கிக் கொண்டனர். ஒருவர், நான் மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று புத்தகங்களை வாங்கிக் கொண்டார்.

**குழு 6:சகோ. R.T.கலைவாணன் குழுவினர்:-**

நாங்கள் கரம்பவிடுதி பஞ்சாயத்திலுள்ள விளரிப்பட்டி கிராமத்தில் யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து சுவிசேஷத்தை அறிவித்தோம். மக்கள் ஆர்வமுடன் கேட்டனர். அநேகர் நாங்கள் இயேசுவை நம்புகிறோம், ஞாயிறு ஆராதனைக்கு வருகிறோம் என்று சொன்னார்கள்.

**குழு 7:சகோ. சி. இஸ்ரேல், சார்லஸ்:-**

நாங்கள் இருவரும் கரம்பக்குடி பஞ்சாயத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்று ஊழியம் செய்தோம். சேவுகன்தெரு கிராமத்தில் அநேகர் இயேசுவை ஏற்றுக் கொண்டனர். வாஞ்சையோடும் தாகத்தோடும் சுவிசேஷம் கேட்டனர். வசந்தி என்ற பெண் ஞானஸ்நானம் எடுக்காமலேயே இயேசுவிடம் நிறைய அற்புதங்கள் கண்டதாகவும், ஞானஸ்நானம் எடுக்கவும் சபைக்கு வரவும் ஒப்புக் கொடுத்தார். பிசாசு பிடித்திருந்த கருணாகரன் என்பவரின் மகளுக்காக ஜெபித்தோம். ஒரே ஒருவர் மட்டும் திட்டி புத்தகம் வாங்க மறுத்து விட்டார். இரவில் தங்க இடம் கிடைக்கவில்லை. இறுதியில் ஓரிடத்தில் தங்கினோம். மறுநாள் மழவராயன் தெரு கிராமத்திற்குச் சென்றபோது எதிர்ப்புகள் அதிகம் இருந்தது. ஒரு அம்மா 'இது தீட்டு' என்று கூறினார். ஒருவர் 'நான் இந்து கிறிஸ்தவரிடம் போய் சொல்' என்றார். சேகர் என்பவர் 'எங்கள் தெய்வத்தை

விடச் சொல்றாங்களே' என்றார். ஆண்டவரின் முக்கியத்துவத்தை விளக்கி சொன்னபோது சபைக்கு வருகிறேன் என்றார். ஒரு அம்மா உங்களவர் இங்கிலீஸ் கடவுள் – என் கடவுள் தமிழ் கடவுள் என்றார். ஒரு அம்மா 'ஒரு அம்மா சாகப்போகிறேனே இது என்ன ?'என்றார். சாத்தான் தெரு கிராமத்தில் புத்தகம் வாங்க மறுத்தனர். ஒருவர் எங்கள் வேதம் பகவத் சீதை கொடுத்தால் ஏற்றுக் கொள்வீர்களா ? என்றார். 3 பேர் மட்டும் இயேசுவை ஏற்று சபைக்கு வர அர்ப்பணித்தனர். சடையன் தெரு கிராமத்திலும் இதே நிலை தான். ஒரு அம்மா 'மழை பெய்யவில்லை, சாப்பாடு இல்லை, பணம் இருந்தா தாங்க, புத்தகம் எதற்கு, இயேசு ஏன் ?' என்றார். கண்டயன்தெரு கிராமத்தில் ஒருவர் மதிய உணவு அளித்து ரூ.40/– காணிக்கை தந்தார். சாமியாடியில் 2 பேர் புத்தகம் வாங்க மறுத்தனர். முஸ்லீம் குடும்பத்தினர் திட்டினர். ஒரு சகோதரி பைபிள் கேட்டார். சபைக்கு வருவதாக சொன்னார்.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

## திருநெல்வேலி - கோடாவிளை
## டி.வி.ஜி.எம். சிறுவர் இல்லம் கட்டிட நிதி

கர்த்தருடைய கிருபையினால் கோடாவிளை கலிலேயா காம்பவுண்டில் உத்தேசமாக 1500 சதுரஅடியில் டி.வி.ஜி.எம். சிறுவர் இல்லம் கட்டுவதற்கு கர்த்தருக்குள் தீர்மானித்துள்ளோம்.

1 சதுர அடி கட்டுவதற்கு அதிகபட்சம் ரூ.350 ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இக்கட்டிடப்பணியை கவனிக்க சகோ.K.P.K. ஜெயக்குமார், புதூர் அவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டுள்ளார்கள். மேலும் எந்த லாபத்தையும் கருதாமல் உண்மையாக ஏற்படும் செலவுகளுக்குரிய பில்களை மட்டும் டி.வி.ஜி.எம்–ல் ஒப்படைத்து, பணத்தை கேட்டு வாங்கிக் கொள்வதாக கூறியுள்ளார்கள். இவர்களுக்காக தேவனைத் துதியுங்கள். கட்டிட வேலைக்கு தேவையான நபர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

இச்சிறுவர் இல்ல கட்டிடப்பணிக்கு உங்களால் இயன்ற மனப்பூர்வமான காணிக்கையை கடைசி பக்கமுள்ள டி.வி.ஜி.எம். தலைமை அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு சதுர அடிக்கு – ரூ. 350
10 சதுர அடிக்கு – ரூ. 3,500
100 சதுர அடிக்கு – ரூ. 35,000

மேலும் விபரங்களுக்கு குண்டல் திரு. ரத்தினம் ஆசிரியர் அல்லது திரு.மனோகர் ஆசிரியர் அல்லது சகோ.K.P.K.ஜெயக்குமாரை அணுகுங்கள்.

**குறிப்பு:–** டிராப்ட் அல்லது செக்குளை **TVGM Social Service, Canara Bank, Puthur Branch, Trichy** பெயரில் எடுத்து அனுப்புங்கள்.

<u>**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**</u>

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

<u>**திங்கள்:**</u> புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒவ்வொரு யூனியன்களிலும் ஊழியர்கள் நிலம் வாங்க பொருளாதார வாசலை கர்த்தர் கட்டளையிடவும், ஆலயங்கள் கட்டப்படவும் ஜெபியுங்கள். அண்டகுளம், விராச்சிலை, முத்து நகர் ஆகிய **3** இடங்களிலும் ஜெபவீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு பிரதிஷ்டை ஆராதனை தடையின்றி நடைபெற ஜெபியுங்கள்.

<u>**செவ்வாய்:**</u> திருநெல்வேலி கோடா விளை கலிலேயா காம்பவுண்டில் கட்டப்பட்டு வரும் **டாக்டர் லாரன்ஸ்** ஜெபஅறைக்காகவும், மேலும் சிறுவர் இல்லம் வசதியாக கட்டப்பட ஜெபியுங்கள்.

<u>**புதன்:**</u> TVGM தலைமை அலுவலகத்தில் ஊழியர்களுக்கான வீட்டு மாடி வேலை சீக்கிரம் முடிவடையவும், நிர்வாக அலுவலகம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

<u>**வியாழன்:**</u> TVGM தலைமை அலுவலகத்திற்கு தேவனால் அனுப்பப் படுகிற அனுபவமுள்ள டைப், கம்ப்யூட்டர், போட்டோஷாப், DTP. வெப்சைட் டிசைனர், வீடியோ கவரேஜ் எடிட்டிங் தாலந்துள்ள கர்த்தருடைய பிள்ளைகள் கிடைக்கவும், கோடாவிளை கலிலேயா காம்பவுண்டில் தங்கியிருந்து சிறுவர் இல்லத்தை கவனிக்க அழைக்கப் பட்டவர்கள் தேவை. ஜெபியுங்கள்.

<u>**வெள்ளி:**</u> TVGM க்கு FCRA ஆர்டர், TVGM Social Serviceக்கு 80 G ஆர்டர், கோட்டா ஆர்டர் கிடைக்கவும் Social Service புதிய திட்டத்தின்படி பதிவு செய்யப்படவும் ஜெபியுங்கள்.

<u>**சனி:**</u> TVGM ஸ்தாபகர் கிராம தரிசன முகாம் நடத்தும்போது அநேகர் தங்களை கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து, சபையை கட்டி எழுப்ப கருத்தாய் ஜெபியுங்கள்.

<u>**ஞாயிறு:**</u> TVGM குண்டல், சோமரசம் பேட்டை சிறுவர் இல்லத்திலும் கல்வி பயின்று வரும் பிள்ளைகள் எதிர்காலத்தில் மிஷனெரிகளாக எழும்ப ஜெபியுங்கள்.

மேலும் TVGM அறிமுகப் பணி அலுவலகத்தில் சேவை செய்து வரும் சகோதரிகளுக்காக ஜெபியுங்கள்.

**T.V.G.M.அறிமுகப்பணிஅலுவலகம்**

**கர்த்தருக்கு சித்தமானால், நாகர்கோவில் வேப்பமூடு பஸ் ஸ்டாண்டிற்கும், வடசேரி பஸ் ஸ்டாண்டிற்கும் இடையில் கர்த்தர் கிருபையாக TVGM அறிமுகப்பணி அலுவலகத்திற்கு ஒரு வீட்டை அல்லது நிலத்தை தரும்படி ஜெபியுங்கள்.**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001.
**செல் : 98658 26424**
**போன் : 04652- 277251.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

**POSTAL REGISTRATION NUMBER**

TN / TR / 17 / 2006 - 2008 ( Inland ) TN / TR / 18 / 2006 - 2008 ( Foreign)

**LICENCED TO POST WITHOUT PREPAYMENT**

TN / TR / 09 / WPP ( Inland ) Posting Date 25th at H.P.O. Trichy.

TN / TR / 09 / WPP ( Foreign) Posting Date 20th at H.P.O. Trichy

## TVGM தலைமை அலுவலகம்

(ALL RECEIPTS ARE TREATED AS OFFERING TO TVGM)

**காணிக்கை மற்றும் தபால் அனுப்ப வேண்டிய முகவரி:–**

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**4 / 272, HUNDRED VILLAGE**
**SOMARASAMPETTAI,(Hospital Stop)**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

**Bank டிராப்ட் எடுக்கும் முறையும் நோக்கமும்:-**

TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)

T.V.G.M. SOCIAL SERVICE (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)

T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம்)

**ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து MR. STEPHEN CHRISTOPHER, SB 1249101 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu. என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, மேற்கண்ட TVGM தலைமை அலுவலக முகவரிக்கு அனுப்பி வைத்து உதவுங்கள்.**


TVGM தொடர்புகளுக்கு

STD Ph : 0-431 - 2607241

Fax : 0-431- 2607446

Mobile : 94435 - 44628

Email : 100village@tvgm.org

*Website :*

**www.tvgm.org**


தினசரி வாக்குத்தத்தம், செய்தி மற்றும் கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

### மாதாந்திர பத்திரிக்கை

**“100–கிராம ஊழியம்”** என்ற கிறிஸ்தவ மாதாந்திர பத்திரிக்கையை தமிழ் / ஆங்கிலத்தில் வாங்கி படியுங்கள். ஜெபியுங்கள்.


REG. NEWS PAPER **R.N.I. Number : TNMUL / 2000 / 4011**


**HUNDRED VILLAGE MINISTRY** ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री